மா மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திரு மதி.A. சீத்தாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஆனித்திங்கள் 29 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்577/22-ல்**

**அசல் வழக்கு எண். 122/2015**

சுப்பிரமணியன் ... மனுதாரர்/ வாதி

**// எதிர்//**

1. பாலகிருஷ்ணன்

2.தமிழ்செல்வன்

3.சார்பதிவாளர், மன்னார்குடி

4.தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர்,

திருவாரூர். ...எதிர்மனுதாரர் /பிரதிவாதிகள்

இம்மனு 27.06.2023 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. ஜீவானந்தம் அவர்களும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன், அவர்கள் முன்னிலையாகியும்,3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கறிஞர் திரு.V.சச்சிதானந்தம் அவர்கள் முன்னிலையாகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்தும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்து ( 14.07.2023) இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி3 ஆக விசாரிக்கப்பட்ட கிராம

நிர்வாக அலுவலரை மீண்டும் வாதி தரப்பில் மறுவிசாரணை செய்வதற்காக மறு அழைப்பு (Recall) செய்ய உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 18 விதி17 சிபிசி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> :-**

அசல் வழக்கானது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது கடந்த 1997 ம் ஆண்டு முதல் இந்த தேதி வரையில் மனுதாரர்/வாதியால் சாகுபடி செய்து அனுபவித்து வரப்படுகிறது. மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சி விசாரணை செய்யப்பட்டு கூடுதல் சாட்சி விசாரணைக்காக அசல் வழக்கு நிலுவையில் உள்ளது.

கடந்த 17.11.2022 ம் தேதியன்று தாவா கிராம நிர்வாக அலுவலர் வா.சா.3 ஆக மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 ஆக ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் வழங்கப்பட்ட தேதிதொடர்பாகவும், கிராம நிர்வாக அலுவலர் தாவா கிராமத்தில் பணிபொறுப்பு உத்தரவு தொடர்பாகவும் அவரை மறு விசாரணை செய்யவேண்டும் என்பதால் அவரை மீண்டும் கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யவேண்டும். எனவே, இம்மனுவினை அனுமதிக்கவேண்டும் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

**3. 1ம் <u>எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>:- (<u>2 ம் எதிர்மனுதாரர் தனதாக ஏற்றுக்கொள்கிறார்</u>)**

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். அசல வழக்கில் வாதி தரப்பு சாட்சிக்காக வாய்தாபோடப்பட்டு விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், 3 வது சாட்சியாக

விசாரிக்கப்பட்ட வா.சா.3 கிராம நிர்வாக அலுவலரை மீண்டும் அழைத்து விசாரணை செய்வது என்பது வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்திற்காகவும், வழக்கின் தன்மை திசை திருப்பும் நோக்கத்திலும், எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்திலும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**5. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

மனு, அபிடவிட், பொதுவான எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழ்கறிஞர், அசல் வழக்கானது வாதி தரப்பில் சாட்சி விசாரணை செய்யப்பட்டு, கூடுதல் சாட்சி விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் வா.சா.3-ஐ மீண்டும் அழைத்து மறு விசாரணை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கத்தில் இம்மனுவானது தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

இம்மனுவினை பரிசீலணை செய்கையில், அசல் வழக்கானது விளம்புகை

மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு வாதி தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலரால் குறியீடு செய்யப்பட்ட Ex.P.X1 ஆவணத்தைப்பொறுத்தும், அவரது பணிபொறுப்பு உத்தரவு தொடர்பு குறித்தும் மறு விசாரணை செய்யவேண்டும் என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியவருகிறது.

மனுதாரருக்கு இயற்கை நீதியின் பொருட்டு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்ட போதிலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படாது என்பதால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மேலும், எதிர்மனுதாரர்களுக்கு ஆவணத்தினைப் பொறுத்து வா.சா.3-ஐ மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்ப்பு உள்ளது என்பதாலும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம், வழக்கின் நிலை ஆகியவற்றினை கருத்திற்கொண்டும் பார்க்கையில் நிபந்தனையுடன் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மனு செலவுத்தொகையாக ரூ.500/-ஐ எதிர்வரும் 27.07.2023 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 28.07.2023

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு,

சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (14.07.2023) அவையறியப்பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

**இரு தரப்பிலும்** : இல்லை

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)